Applicant Copy

| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு.W.இராஜேந்திரன்,<br>ஆணையாளர்,<br>வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்,<br>(இ) அம்பத்தூர். | ஊராட்சி மன்றத் தலைவர்<br>பொத்தூர் ஊராட்சி |

ந.க. எண். 749/2024/அ3 நாள்: .04.2024

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல் - வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் - பொத்தூர் ஊராட்சி - சர்வே எண்: **92/1B & 2C** கொண்ட இடத்தில் 55 மனைப்பிரிவுகள் அமைத்தல் - மனைப்பிரிவு அனுமதி ஒப்பளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் காந்தி இர்வின் சாலை, எழும்பூர் சென்னை - 8 அவர்களின் கடிதம் எண்:L1/0286/2023 நாள் : 06.03.2024
2. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் PPD LO No : **72/2024** Permit No: **15794** நாள் : **08.04.2024**

**********

பார்வையில் காணும் உறுப்பினர் / செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடிதத்தின்படி பொத்தூர் ஊராட்சி , சர்வே எண்: **92/1B & 2C** கொண்ட இடத்தில் 55 மனைப்பிரிவுகள் மனைகள் அமைக்க **PPD/LO.No: 72/2024** -ன் படி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட அனுமதி வழங்கப்பட்டது. கீழ்குறிப்பிட்டுள்ள ஒன்றிய கட்டணங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட வரைபட அனுமதியில் குறிப்பிட்டுள்ள உரிய விதிகளுக்குட்பட்டு இறுதி அனுமதி வழங்க ஊராட்சி மன்ற தலைவர், பொத்தூர் ஊராட்சி அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

| S.No | Details of Head Taken | Name of Bank / DD No & Date | Amount (RS) |
|---|---|---|---|
| 1 | Commissioner,Villivakkam, Panchayat Union. | E- Challan 20240429006811 | 55,000 |
| 2 | Flag Day | Online Payment www.flagday.tn.gov.in | 30,000 |

<u>நிபந்தனைகள்</u>

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு, மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட்டதனை உறுதி செய்துக்கொண்டு அதன் பின்னரே அனுமதி வழங்கப்பட வேண்டும்.

2. தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்து தரவேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

3. தெரு மனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்படவேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

5. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும் மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்பிற்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.

7. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 5 அடி அளவு உள்ள திறந்த வெளி இருக்கவேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால், அக்கட்டிடங்கள் மொத்தமான பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்பட்ட மனையின் பின்பக்க மட்டத்திலிருந்து 12 அடி உயரத்திற்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.

8. மனையின் பரப்பின் 75 சதவீதத்திற்கும் மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

9. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்தவேண்டும். நிலச்சரிவை நேர்செய்யவோ மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள் ஏற்படுத்தக் கூடாது.

10. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத் திட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

12. மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கட்டணம் பெற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்க ஊராட்சி மன்ற தலைவர் பொத்தூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

13. சாலை வசதி குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதிக்குரிய அனைத்து கட்டமைப்புகளையும் இந்த மனைப்பிரிவு உரிமையாளர் செய்து தர வேண்டும். அதை பொத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

14. ஒப்புதல் அளிக்கப்படும் இந்த வரைபட அனுமதிக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழும வரைபடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள I முதல் III வரையிலான நிபந்தனைகள் அனைத்தும் தவறாமல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கிட ஊராட்சி மன்ற தலைவர், பொத்தூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

15. தவறும்பட்சத்தில் உள்ளாட்சி அமைப்பின் மூலம் வழங்கப்படும் மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

16. L.T. Line மனைகளின் குறுக்கே உள்ளதை எடுப்பதற்கும் அல்லது மாற்றி அமைப்பதற்கு TNEB- க்கு பணம் செலுத்தப்பட வேண்டும். அப்பணி முடிவுற்றதா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

17. H.T. Line-க்கு கீழ் மனைகற்கள்/மனைகள் அமைத்தல் கூடாது காலியாக இருக்கவேண்டுளம் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

18. பூங்காகள் TNEB-க்கு ஒதுக்கிய இடம் Public Purpose Area ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்டஇடங்கள் ஊராட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும்.

19. ஊராட்சியில் முறையாக தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு இறுதியாக செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் வசூலித்து மனைபிரிவு ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

20. பொதுபணித்துறை மூலம் வரைபடத்தில் தெரிவித்துள்ளவாறு நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

21. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் 0.6m மழைநீர்கால்வாய் அமைக்கப்படவேண்டும் பொத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

22. இந்த மனையில் (PWD Chanal ) பொதுபணித்துறை கால்வாய்கள் இருப்பின் அதனை பரமாரிக்கப்பட வேண்டும். பொத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

23. வரைபடத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார்சாலைகள் அமைக்கபடவேண்டும்.

24. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெருவிளக்கு மின்கம்பங்கள் நடப்படவேண்டும்.

25. அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம், கழிவு நீர் வடிகால்வாய் மற்றும் தெருமின்விளக்குகளுக்கான மின் இணைப்பு இருக்க வேண்டும். அனைத்தும் சம்பந்தப்பட்ட உரிமையாளரால் பணிகள் செய்து முடித்து தரப்படவேண்டும் அல்லது அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து கட்டணங்கள் வங்கி வரைவோலைகள் மூலம் பொத்தூர் ஊராட்சிக்கு செலுத்தியப்பின் ஊராட்சி தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

26. அடிப்படை வசதிகளுக்கான பணிகள் முடிக்காமல் வரைபட அனுமதி ஊராட்சியால் அளிக்கப்பட்டால் அதற்கான முழு பொறுப்பு / வழக்குகள் / அனைத்தும் 1994 ஊராட்சிகள் சட்டம் ஊராட்சி செயல்அலுவலர் / தலைவர் என்ற முறையில் கிராம ஊராட்சி மன்றத் தலைவரே இதற்கு முழு பொறுப்பாவார்.

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம்.

ஆணையர்
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்
(இரு) அம்பத்தூர்

20/4/24.

நகல்

1. D.Lokesh,
Door No: 19/43, Bharak 2nd Street,
Purasawalkam, Nammalwarpet,
Chennai-12.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வில்லிவாக்கம்
3. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்.
எண் 1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 08.

# Chennai Metropolitan Development Authority
## PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 15794

Date of Permit 8.04.2024

R.P.D No. 72 L.O 2024

File No Layout 1/0286/2023

Name of Applicant with Address Thiru. D. Lokesh, No. 19/43, Bharath 2nd street, Purasawalkam, Nammalwarpet, Chennai - 600 012.

Date of Application 28/08/2023.

Nature of Development : Layout/Sub-division of Land/Building construction/ Charge in use of Land/Building

Site Address Proposal for laying out of house sites in S.No. 92/1B & 2C of Pothur Village, Avadi Taluk, Tiruvallur District.

Division No. Villivakkam Panchayat Union limit

Development Charge paid Rs 38,000/ Challan No. B-0025126 Date 21/03/2024

PERMISSION is granted to the layout/sub-division of land/building construction/change in use of land/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on .............................................................. the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction 'already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

For MEMBER SECRETARY

| | |
|---|---|
| **அனுப்புநர்:** | **பெறுநர்:** |
| திரு.டபிள்யூ. இராஜேந்திரன், | திரு.D.லோகேஷ், |
| ஆணையாளர் | எண்: 9/43, பாரக் இரண்டாவது தெரு, |
| வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் | புரசைவாக்கம், நம்மாழ்வார்பேட்டை. |
| (இ) அம்பத்தூர். | சென்னை - 600012. |

**ந.க.எண்: 749/2024/அ3** **நாள்: .04.2024.**

**அய்யா,**

**பொருள்:** மனைப்பிரவு அனுமதி - வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் - பொத்தூர் ஊராட்சி - சர்வேஎண்: **92/1B & 2C** - ல் 55 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் அங்கிகரிக்கப்பட்டு உத்தரவு வரப்பெற்றது - இறுதி ஓப்பளிப்பு அனுமதி வழங்க - கட்டணங்கள் செலுத்த கோருதல் - சார்ந்து.

**பார்வை:** சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், காந்தி இர்வின் சாலை, எழும்பூர் சென்னை– 8 அவர்களின் கடித எண்: L1/0286/2023 நாள்: 08.04.2024.

X-X-X-X-X

பார்வயைில் கண்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், காந்தி இர்வின் சாலை, எழும்பூர் சென்னை– 8 அவர்களின் கடித்தின் படி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சி சர்வே எண்: **92/1B & 2C** - ல் 55 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் அங்கிகரிக்கப்பட்டு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், இணைப்பில் உள்ள விவரப்படி கட்டணம் செலுத்திட தெரிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்
(இ) அம்பத்தூர்

26/4/24

A3.3610.19-ADVICE-.மனைப்பிரிவு ஒப்பளிப்பு

கட்டண விவரம் (செலுத்திய மற்றும் செலுத்தப்பட வேண்டியது)

- Total Extend : 8050 Sq.m
- Road Area : 2387 Sq.m
- No.of Plots : 55 Nos
- Public Purpose provided (1&2) 70 Sq.m

| Sl. No | Description | Payment Details | Amount |
|---|---|---|---|
| 1 | **Development Charges** | B-0025126 Dt: 21.03.2024. | 38000 |
| 2 | **Layout Preparation Charges** | B-0025126 Dt: 21.03.2024. | 25000 |
| 3 | **Contribution to Flag Day Fund** | B-0025126 Dt: 21.03.2024. | 500 |
| 4 | **Scrutiny Fees** | CMDA/PP/Ch/11718/2023 Dated:28.08.2023. (Already Paid in CMDA) | 12075 |
| 5 | **OSR Charges** | B-0025126 Dt: 21.03.2024. | 14,40000 |
| 6 | **Flag Day Fund** | Online Payment WWW.Flagday.tn.gov.in ( Referal Officer- Click "NO" District-Thiruvallur , desgination-BDO Villivakkam BP) | **30,000** |
| 7 | **Panchayat Union Fund** | Amount to be remitted in panchayat Union General Fund Account No.1By E-Challan **Department Code – 06601,public Accounts. Account code -833800104AM80101 (Applicants are requested to obtain E-Challan from BDO Office computer section and remit in bank)** | **55,000** |

ஆணையாளர்
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்
(இ) அம்பத்தூர்

பொது மற்றும் மறுவாழ்வுத் துறை

முன்னாள் படைவீரர் நலத்துறை, தமிழ்நாடு அரசு

**Public and Rehabilitation Department**

Department of Ex-Servicemen's Welfare, Govt of Tamil Nadu

Armed Forces Flag Day Fund

# Armed Forces Flag Day 2023
## (December 7th 2023 - December 6th 2024)
## Donation Receipt

| | | |
|---|---|---|
| Date: **29/04/2024** | Receipt No: **FD/FUND/73037** | Acknowledgment Ref.No: **FL1207552040** |
| Received with thanks from, | | |

| | |
|---|---|
| Name of Donor | **D LOKESH** |
| Mobile No | **9710510506** |
| Email Id | **mohanajeeva2504@gmail.com** |

| | |
|---|---|
| Payment Mode | **Online** |
| Bank Ref.No | **IP241209593702** |
| Referred By | **BDO Villivakkam B.P** |

| | |
|---|---|
| Transaction Amount | **₹ 30000.00** |

Donation to Armed Forces Flag Day Fund is Exempted under Section 80G(5) (vi) of IT Act 1961,

Unique Registration No.F.No.197/144/2006-ITA-1/80G

PAN No.AAATT3614P.

This is computer generated e receipt no signature required.

Received 29.4.24

Dy Block Development Officer (BP)
Villivakkam Panchayat Union
(at) Ambattur, Chennai - 53.

# Government of Tamil Nadu

E-Challan

Payable at - ST AMBATTUR

Remitter Copy

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Challan Number** | 20240429006811 | **Challan Date** | 29-Apr-2024 | **Payment Date** | |
| **Remitter Type** | Employee | **Remitter Code** | 42021196320 | **Remitter Name** | Glory G |
| **Mobile No.** | 9840423845 | **Aadhaar No.** | XXXXXXXX5397 | **Remitter Address** | 1/128 Pajanai Kovil ST |
| **Department** | 06601-PUBLIC ACCOUNTS | **District** | THIRUVALLUR | **DDO Code** | 18020010 |
| **DDO / Office Name** | BDO (BP) Villivakkam, Tiruvallur | **Department Transaction ID** | | **Office Name** | |

| Receipt Type | Sub Type | Acct Code | Amount | Reference No. | Remark |
|---|---|---|---|---|---|
| OTHERS | OTHERS | 833800104AM80101 | 55000 | PU Fees | D.Lokesh,RC.No.749/2024/A3,Approval of Layout -Pothur Panchayat - S.No.92/1B &2C Plots 55 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Payment Mode** | Offline | **Payment Type** | Cash | **Payment Status** | Pending |
| **Challan Amount (Rs.)** | 55,000 | | | **Bank Name** | SBI |
| **Amount (in words)** | Fifty Five Thousand Rupees only. | | | **Bank ref no.** | CPADTLACK2 |

**Remitter Signature**

**For Bank Use**

29 APR 2024

**Bank Branch Stamp and Signature of Cashier** **Manager/Accountant**

Please Note*, Department Transaction ID and Office Name fields are created only for 4 interface department Registration and Transport and CT for there specific requirements and the values entered in this fields are values passed by them not from IFHRMS.

Received on 29.4.24

Dy.Block Development Officer (BP)
Villivakkam Panchayat Union
(at) Ambattur, Chennai - 53.

# பொத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : **திரு.பெ.வ.சுரேஷ்.B.Sc,BL,**

க.உ.எண் :**01/2024-2025/**பொ.ஊ/நாள் : **16.05.2024**

**P.P.No** : 15794 / 08.04.2024.

**பொருள் :** மனைப்பிரிவு / மனை உட்பிரிவு - வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், பொத்துர் ஊராட்சி -சர்வே எண் -92/1B & 2C, 55 வீட்டு மனைப்பிரிவு / உட்பிரிவு அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :**

1. உறுப்பினர், செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம், காந்தி இர்வின் சாலை, எழும்பூர் சென்னை -8,அவர்களின் கடித எண் : L1/0286/2023, நாள் :06.03.2024
2. சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் PPD LO No:72/2024 Permit No :15794 நாள் : 08.04.2024
3. ஆணையாளர், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்,(இ)அம்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண் :749/2024/அ3,நாள் :30.04.2024

**உத்தரவு :**

பார்வையில் காணும் உறுப்பினர் / செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதத்தின்படி பொத்துர் ஊராட்சி -சர்வே எண் -92/1B & 2C, கொண்ட இடத்தில் 55 மனைப்பிரிவுகள் அமைக்க PPD LO No:72/2024ன் படி சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தினால் திட்ட அனுமதி வழங்கப்பட்டது. குழுமத்தினால் திட்ட வரைப்பட அனுமதியில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்குட்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மனை பிரிவு அனுமதி அனுமதிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் ஆணையாளர், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்,(இ)அம்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண் :749/2024/அ3, நாள்:30.04.2024ன்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாகம் அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிக்கால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடுபட்டுள்ள எந்த மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாத கடை,பண்டக சாலை மற்றும் குடியிருப்பு

அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கில்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக்கூடாது.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5. அங்கிகரிக்கப்பட்ட வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுசுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.

6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாது ஆனால் அதைச்சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க ______பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. மனையின் பரப்பின் 50 சதுரத்திற்கு மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

8. கடக்கால் போடத்தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்த பள்ளங்கள் ஏற்படுத்தக்கூடாது.

9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திட்டங்கள் விற்பனைப்பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கிகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு -மனை பிரிவு வரைப்படம்

பெறுநர் :

திரு.D.லோகேஷ்,
எண்-19/43, பரக்கா ரோடு 2 வது தெரு,
நம்மாழ்வார்பேட்டை,சென்னை -600012,
கைபேசி எண் : 9840222159.

தலைவர்
பொத்தூர் ஊராட்சி
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்.

தலைவர் / செயல அலுவலா
பொத்தூர் ஊராட்சி
வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்